

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டி நடைபெற்றது.கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வெற்றி பெற்றவர்களுக்கு எண்பத்தி எட்டாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஐட்ரீம்.இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, கழக மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், ந.மனோகரன், இரா.கருணாநிதி, பி.டி.பாண்டிசெல்வம், இரா.நரேந்திரன், ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, வி.தயாளன், நிகழ்ச்சி ஏற்பாடு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மோ.ரவிக்குமார், பிரசிடென்சி.சி.சதீஷ், ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சத்திஸ்வரி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

## மேயர் ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்!

சென்னை, நவ.4-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை தலைமையிடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் (ICCC) கண்காணிக்கப்படுவதை மேயர் திருமதி ஆர்.பிரியா பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து மேயர் ஆர்.பிரியா செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஆண்டு முதல் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முதலமைச்சர் மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடாது என்று தெரிவித்ததன் அடிப்படையில், மழைநீர் வடிகால் பணிகள் சிறப்பாக மிகப்பெரிய பணியாக தற்பொழுது வரை நடைபெற்று வருகிறது.

பருவமழையினை முன்னிட்டு, விழும் நிலையில் உள்ள மரங்கள் மற்றும் மரக்கிளைகளை அகற்றும் பணிகள் அக்டோபர் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பருவமழையினை முன்னிட்டு, 24 மணிநேரமும் செயல்படும் வகையில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையின் மூலமாக மாநகராட்சியின் அனைத்து பகுதிகளும் கண்காணிக்கப்படும். இந்தக் கட்டுப்பாட்டு அறையில் இரண்டு மாத காலத்திற்கு தாசில்தார்கள், காவல்துறை, தீயணைப்புத் துறை, மின் துறை உள்ளிட்ட பிற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் நியமிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அறையில் பொதுமக்களிடமிருந்து புகார்களை பெறும் வகையில் 5 இணைப்புகளுடன் செயல்பட்டு வந்த 1913 உதவி எண்ணானது தற்பொழுது 15 இணைப்புகளுடன் செயல்படும். இதுமட்டுமில்லாமல் பொதுமக்கள் 044 2561 9204, 0442561 9206 மற்றும் 0442561 9207 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு புகார்களைத் தெரிவிக்கலாம்.

மேலும், தாழ்வான பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள 109 இடங்களில் மழை அதிகமாக பெய்யும் பொழுது, காவல்துறை மற்றும் மீன்வளத்துறையுடன் இணைந்து நிவாரணப் படகுகள் மூலமாக பொதுமக்களை மீட்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் பொதுமக்களுக்கு நோய்த்தொற்று மற்றும் காய்ச்சல் ஏற்படாத வண்ணம் மண்டலங்களுக்கு 3 எனும் வீதம் 45 மருத்துவ முகாம்கள் தினந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. டெங்கு காய்ச்சல் நடவடிக்கையாக மலேரியாப் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று மழைநீர் தேங்க வாய்ப்புள்ள டயர், தேங்காய் சிரட்டை உள்ளிட்ட தேவையில்லாத பொருட்களை அகற்றி, உபயோகிக்கும் நீரினை சரியான முறையில் மூடி வைக்கவும், இது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி வருகிறார்கள். நிலவேம்பு மூலிகை பவுடர் 645 கி.கி. தயார்நிலையில் உள்ளது. மேலும் வீடுவீடாகச் சென்று குளோரின் பவுடர்கள் வழங்கப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 10,360 சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 5000க்கும் மேற்பட்ட சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 70 சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பருவமழைக்கு முன்னதாக பணிகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதமுள்ள சாலைப் பணிகளும் விரைவில் முடிக்கப்படும் என மேயர் பிரியா தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர்கள் சங்கர்லால் குமாவத், (சுகாதாரம்), திருமதி ஆர்.லலிதா, (வருவாய் (ம) நிதி), இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர்கள் திருமதி ஷரண்யா அறி, (கல்வி), எம்.பி.அமித், (தெற்கு வட்டாரம்) , கே.ஜெ.பிரவீன் குமார், (மத்திய வட்டாரம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்) மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.




